**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 205/2015**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | DW.3 |
| NAME | வீராங்கன் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 15.04.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. கள்ளியூர் வேறு, கஸ்பா வேறு என்றாலும் கள்ளியூர் கிராமம் என்றாலும் சரிதான். கள்ளியூர் கிராமம் சீவூர் பஞ்சாயத்தில் வருகிறது என்றால் சரிதான். கஸ்பா நகர எல்லைக்குள் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்தது என்றால் முருகன் என்னை வழக்கறிஞரிடம் அழைத்து சென்று நான் சொல்லி தயார் செய்யப்பட்டது.

2. கருப்பாயிக்கு அரசாங்கம் கொடுத்த பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் இல்லை, கேள்விப்பட்டுள்ளேன். சொத்தின் சர்வே எண் மற்றும் செக்குபந்தி தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் கிருபாகரன் தான் இதுவரை சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எந்த தேதியில் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் தேதி ஞாபகமில்லை சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு தயார் செய்யப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லி ஒருவர் அதை எழுதி பிறகு அதை டைப் செய்தார்கள். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை கேள்விப்பட்டு தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

3. நான் நகை கடையில் பணம் கலெக்ஷன் வாங்குபவராக உள்ளேன். ஆட்டோ பைனான்ஸ் பணம் கட்டவில்லை என்றால் வண்டிகளை ஜப்தி செய்வேன் என்றால் சரியல்ல கடையில் தான் இருப்பேன். பிரமாண வாக்குமூலத்தில் எனது தொழிலை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேற்சொன்ன தொழிலை செய்யவில்லை என்றாலும் நான் பணம் கொடுத்தால் பொய் சாட்சி சொல்பவர் என்றால் சரியல்ல. நான் என் ஊருக்கு சம்பந்தமில்லாத நபருக்கு சாட்சி சொல்ல வந்ததில் இருந்து நான் எந்த அளவுக்கு தயாராக இருப்பவர் என்றாலும் அதனால் எனது சாட்சியம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/- K.கார்த்திக் அசாத்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.